# எம்மைப் பற்றி
# நாம் கூறுகின்றோம்!




அகில இலங்கை அஹ்லுல்பைத் ஜமாஅத்

- கல்குடா கிளை -

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*

# அகில இலங்கை அஹ்லுல்பைத் ஜமாஅத்

# எம்மைப் பற்றி நாம் கூறுகின்றோம்!

***அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும்.***

*நீண்ட காலமாக ஷீஆ முஸ்லிம்களை எதிர்த்தல் என்ற பெயரில், அஹ்லுல்பைத் ஜமாஅத்தினராகிய எமக்கு எதிரான பிரசாரங்களும் நடவடிக்கைகளும் இலங்கையில் கடுமையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மைக்காலங்களில் இத்தகைய பிரசாரங்கள் மிகவும் தீவிரம் இப்பிரதேசத்தில் பெற்றுள்ளன. பொய்யான குற்றச்சாட்டுகளையும் அவதூறான விமர்சனங்களையும் கூறி, எம்மை சமூகத்திலிருந்து ஒதுக்கி விடவும் தனிமைப்படுத்தவும் இத்தகைய பிரசாரங்கள் முயற்சிக்கின்றன. மிக நீண்ட காலமாக எம்மீது சுமத்தப்படுகின்ற இத்தகைய அபாண்டங்களையும் அவதூறுகளையும் நாம் பொறுமையுடன் சகித்துக் கொண்டு வாழ்ந்தோம். இவற்றுக்கெல்லாம் பதில் கொடுக்க முனைவதன் மூலமாக சமூகத்தில் ஐக்கியம் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற பயமே எமது நீண்ட கால அமைதிக்கான காரணம். எனினும், இப்பிரதேசத்திலுள்ள எமது நெருங்கிய சகோதரர்கள் அனைவரும், இதற்கு மேலும் மௌனமாக இருப்பது உசிதமல்ல என்ற கருத்தை முன்வைத்ததன் காரணமாக, நாம் சமூகத்தின் முன் எமது தரப்பு நியாயங்களைக் கூற வேண்டிய நிலைக்கு உட்பட்டுள்ளோம். இதன் நிமித்தமே, இப்பிரசுரத்தின் மூலமாக உங்களைச் சந்திக்கின்றோம்.*

## ***நாங்கள் யார்?***

*நாங்கள் புனித அல்குர்ஆனையும் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழிமுறை மற்றும் அன்னாரது மரியாதைக்குரிய குடும்பத்தினரின் முன்மாதிரிகள் என்பவற்றையும் பின்பற்றி வாழ்பவர்கள். நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ள "நான் பெறுமதி மிக்க இரு விடயங்களை விட்டுச்*

செல்கிறேன். அவற்றைப் பின்பற்றிக் கொண்டிருக்கும் போது நீங்கள் வழிதவற மாட்டீர்கள். ஒன்று அல்லாஹ்வின் வேதம் அல்குர்ஆன், மற்றையது எனது குடும்பத்தினராகிய அஹ்லுல்பைத்" (ஸஹீஹ் முஸ்லிம், திர்மிதீ) எனும் ஹதீஸை ஏற்றுப் பின்பற்றி வருகின்றோம். நபியவர்களின் மனைவியரான உம்மஹாதுல் முஃமினீன்களையும், அன்னாரது தோழர்களான ஸஹாபாக்களையும் மதித்துப் போற்றுவதுடன், இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய இமாம்களையும் கண்ணியப்படுத்தி வருகின்றோம்.

நாங்கள் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற கலிமாவை உளப்பூர்வமாக ஏற்று மொழிந்தவர்கள். இந்தக் கலிமாவை ஏற்று மொழிந்தவர்கள் அனைவரும் முஸ்லிம்களே என்ற நம்பிக்கையை நாங்கள் கொண்டுள்ளோம்.

அஹ்லுஸ் சுன்னாக்கள் ஏற்று மதித்து நடைமுறைப்படுத்தி வருகின்ற கத்முல் குர்ஆன் ஓதுதல், மீலாதுந்நபி விழா, கப்றுகளைத் தரிசித்தல், ஆஷுரா, வஸீலா போன்ற சமய கலாசார நிகழ்ச்சிகளை நாங்களும் ஆதரித்துச் செய்து வருகின்றோம்.

நாங்கள் எப்போதும் அமைதியையும் ஐக்கியத்தையும் விரும்புபவர்கள். கடந்த 28 வருடங்களாக பொறுமையாகவும் மௌனமாகவும் இருந்தோம். வலிந்து எமது கொள்கையை மக்கள் மத்தியில் திணிக்கவோ, சமூகத்தில் குழப்பங்களை உண்டுபண்ணவோ நாங்கள் ஒரு போதும் முயன்றது கிடையாது. இப்போதும் கூட, எம்மீது சுமத்தப்பட்டு வரும் தொடர்ச்சியான மற்றும் அபாண்டமான குற்றச்சாட்டுகள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கவே இப்பிரசுரத்தை வெளியிடுகின்றோம்.

சுமார் 28 வருடங்களுக்கு முன்பிருந்து ஒரு சமூகமாக இப்பிரதேசத்தில் நாங்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும், ஒரு போதும் எம்மை ஷீஆக்கள் என்று நாம் அறிமுகப்படுத்திக் கொண்டது கிடையாது. அவ்வாறு அறிமுகப்படுத்திக் கொள்வது தேவையற்றது என்பது எமது எண்ணம். இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம், எம்மிடையிலுள்ள சில்லறைப் பிரச்சினைகளுக்காகப் பிரிந்து வேறுபட்டு

பலவீனமடைந்து விடக் கூடாது என்பதே எங்களது நோக்கம். நாங்கள் பரம்பரையாக வாழ்ந்து வரும் இங்குள்ள முஸ்லிம்களுடன் ஒன்றோடு ஒன்றாகக் கலந்து ஐக்கியத்துடன் வாழவே விரும்புகின்றோம். சில்லறைப் பிரச்சினைகளைக் கூறி, சமூகத்தைப் பிளவுபடுத்தும் படியாக நாம் ஒரு போதும் செயற்பட்டதில்லை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

நாம் சமூகத்தில் குழப்பங்கள் எவற்றையும் உண்டுபண்ணவில்லை. நபிகளாரை மரியாதைக் குறைவாகப் பேசியதில்லை. நபிகளாரின் மனைவியரையோ அவர்களது அருமை ஸஹாபாக்களையோ தூற்றியதில்லை. இவை எல்லாவற்றையும் செய்து கொண்டிருப்பவர்கள் வஹாபிஸ இயக்கத்தினரே. ஆனாலும், நாமே இவற்றைச் செய்வதாக எம்மீது அவதூறாகக் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றனர். இதற்கான பின்னணி என்ன?

### எம்மை எதிர்ப்பதற்கான பின்னணி

சவூதி அரேபியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஒன்று, ஈரானை எதிர்ப்பது என்பதாகும். இந்தக் கொள்கையின் பின்னணியில் நின்றுதான், எமது பிரதேசத்தில் ஈரானின் நிதி அனுசரணையில் இயங்கி வரும் அரபு மத்ரஸாவை, சவூதியிடமிருந்து நிதி அனுசரணை பெற்றுச் செயற்படுபவர்கள் பார்க்கின்றார்கள். இந்த மத்ரஸாவையும் அதனைச் சார்ந்துள்ள சமூகத்தையும் எதிர்ப்பதன் மூலம், தமது சவூதி எஜமானர்களை மகிழ்விக்க அவர்கள் முயல்கின்றார்கள். ஷீஆ முஸ்லிம்களை எதிர்ப்பது என்ற விடயம் பெருமளவு நிதி புரளுகின்ற பாரிய செயற்றிட்டமாகும். இத்தகைய செயற்றிட்டங்களுக்கு உதவுவதற்கு சவூதி போன்ற மத்திய கிழக்கின் அரபு நாட்டு மன்னர்கள் எப்போதும் தயாராகவே உள்ளனர். ஏனெனில், ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சி போன்று தமது நாட்டிலும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதே அவர்களது ஒரே நோக்கம். அவ்வாறு ஏற்பட்டால், தமது ஆடம்பரமான மற்றும் படாடோபமான வாழ்க்கை முறைகளையும், சொகுசுகளையும் இழக்க நேரிடும் என்ற அச்சம் அவர்களுக்குள்ளது. எனவே, ஈரான் தொடர்பாக தவறான கருத்துகளை விதைப்பதன் மூலம், அங்குள்ள

இஸ்லாமியப் புரட்சியையும் மக்களிடமிருந்து மறைத்து விட முடியும் என அவர்கள் கருதுகின்றனர்.

வஹாபிஸக் கொள்கையின் தோல்வி சவூதியையும் மேற்குலகங்களையும் அவநம்பிக்கை கொள்ளச் செய்துள்ளது. வஹாபிஸம் என்பது, முஸ்லிம்களிடையே குழப்பங்களை உண்டுபண்ணுவதற்காக இஸ்லாமிய விரோத சக்திகளினால் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட ஒரு கொள்கையாகும். இதனை அமெரிக்காவே ஏற்றுக் கொண்டுள்ளது. ரஷ்யாவைத் தோற்கடிக்கவே வஹாபிகளை நாங்கள் உருவாக்கினோம் என அமெரிக்க வெளியுறவுச் செயலர் வாக்குமூலம் அளித்திருக்கிறார். (பார்க்க: www.thedal.lk)

ஷைத்தானின் கொம்பு முளைக்கும் என்று நபியவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட சவூதியின் நஜ்த் பிரதேசத்திலிருந்துதான் இந்தக் கொள்கை உருவாக்கம் பெற்றது. மத்திய கிழக்கில் ஏற்பட்ட மற்றும் ஏற்பட்டு வருகின்ற இழப்புகள், சண்டைகள் மற்றும் குழப்பங்கள் அனைத்தினதும் பின்னணியில் இந்த வஹாபிஸமே உள்ளது. எனினும், தற்போது வஹாபிஸம் தோல்வி கண்டு விட்டது. மத்திய கிழக்கில் வஹாபிஸத்தினால் தோற்றுவிக்கப்பட்டு, மத்திய கிழக்கை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அல்கைதா, தாலிபான், ஐஎஸ்ஐஎஸ் மற்றும் ஆபிரிக்காவில் காட்டுமிராண்டித்தனமாக செயற்பட்டு வரும் போக்கோ ஹராம் போன்ற தீவிரவாதக் குழுக்களின் முகத்திரை கிழிந்து விட்டது. உலக முஸ்லிம்கள் இவர்களை யாரென்று அடையாளங் கண்டு கொண்டனர். இவர்கள் மேற்குலகினால் உற்பத்தி செய்யப்பட்ட கோடரிக் காம்புகள். அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக சக்திகள், முஸ்லிம்களைக் கொண்டே முஸ்லிம்களை அழிக்கும் செயற்றிட்டத்தை இவர்கள் மூலம் நிறைவேற்றி வருகின்றன. எனினும், நீண்ட காலங்களாகியும் இஸ்லாத்தை முழுமையாக அழித்து விடுவது என்ற தமது இலக்கை இவர்களால் அடைய முடியவில்லை.

சர்வதேசத்தில் மட்டுமன்றி, உள்நாட்டிலும் கூட வஹாபிஸம் தோல்வி கண்டுவிட்டது. இங்குள்ள வஹாபிகளின் சில்லறைப்

பிரச்சினைகளைக் கேட்டுக் கேட்டு மக்கள் சலிப்புற்று விட்டனர். இவர்கள்தான் உண்மையான குழப்பவாதிகள் என்பதை தோலுரிக்கும் தருணம் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது. எனவே, தம்மைத் தற்காத்துக் கொள்ளவும், தம் பக்கத்தை நியாயப்படுத்தவும், இன்னொருவர் மீது பழிபோட வேண்டிய தேவை இங்குள்ள வஹாபிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காகவே, இவர்கள் ஷீஆ முஸ்லிம்கள் மீது காழ்ப்புணர்வுடன் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

இங்குள்ள வஹாபிஸ இயக்கத்தினர், தமது பொருளாதார நலன்களுக்காக அரபு நாடுகளில் தங்கியிருப்பவர்கள். தங்களது பக்கட்டுகளை நிரப்பிக் கொள்வதற்கான ஒரு வழியாக, இந்த ஷீஆ எதிர்ப்பு நடவடிக்கையை அவர்கள் பயன்படுத்துகின்றனர். அதன் பெயரில், நிறையப் பணங்களை அரபு நாடுகளிடமிருந்து பெற்று, அதில் பெருமளவானவற்றை தம் பக்கட்டுகளுக்குள் பதுக்கிக் கொண்டு, மீதியை வைத்து, விழிப்புணர்வுக் கூட்டம் என்ற பெயரில் இப்படியான நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். இதனால் அவர்களது பொருளாதாரம் பெருகி, அவர்கள் கார்களில் ஊர் வலம் வருவதையும் வயல்களையும் காணிகளையும் வாங்கிப் போட்டு பணக்காரப் போடிமார் ஆகியுள்ளதையும் நாம் பார்க்கின்றோம்.

உலகில், அநியாயத்திற்கெதிராக பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக சக்திகளும் சவூதி போன்ற சர்வாதிகார சக்திகளும் இப்போராட்டங்களின் போது தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதில் முக்கிய கவனம் செலுத்துகின்றன. தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, இப்போராட்டங்களை ஷீஆ சுன்னா பிளவுகளாகக் காட்டிக் கொண்டு சுன்னாக்களுக்கு உதவும் தோரணையில் அநியாயங்களைக் கட்டவிழ்த்து விடுகின்றன. இதன் எதிரொலியாகவே, எமது நாட்டிலும் இத்தகைய ஷீஆ எதிர்ப்புக் கூக்குரல்கள் ஓங்கி ஒலித்து வருவதை நாங்கள் பார்க்கின்றோம். இதைத் தவிர, உலகில் ஷீஆ-சுன்னா முஸ்லிம்களிடையே சண்டை என்பதாக வரும் செய்திகளில் உண்மைகளில்லை என்பதையும் நாம்

அறிந்து கொள்ள வேண்டும். இரு தரப்புகளுக்குமிடையில் பகைமையை வளர்க்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் சதி முயற்சிகளில் ஒன்றே இதுவாகும். அதாவது இடையிலுள்ள தீவிரவாதிகளே இச்சதிகளைச் செய்து வருகின்றனர்.

### குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மை

ஷீஆ முஸ்லிம்களுக்கு எதிராக வஹாபிகளால் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் அபாண்டமானவையும் ஒருதலைப் பட்சமானவையுமாகும். சுன்னாக்களிடம் உள்ள அதே குர்ஆன்தான் ஷீஆக்களிடமும் உள்ளது. ஷீஆக்கள் நபி (ஸல்) அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும், அவர்களது மனைவியரையும் அவர்களது தோழர்களையும் மிகவும் மதித்துப் போற்றுபவர்கள், நபி (ஸல்) அவர்களது பெயரைக் கேட்டதும் சத்தமிட்டு ஸலவாத் சொல்லக்கூடியவர்கள், இஸ்லாமிய மார்க்கக் கல்வியில் எண்ணற்ற நூல்களையும் ஆய்வுகளையும் செய்து சமுதாயத்திற்கு வழங்கியுள்ளவர்கள், இஸ்லாத்தைப் பாதுகாக்க எத்தகைய தியாகங்களையும் போராட்டங்களையும் செய்வதற்குத் துணிந்தவர்கள். நபிகளாரின் மனைவியரையும் அவர்களது ஸஹாபாக்களையும் தூற்றுவது ஹராம் என்ற ஃபத்வா ஷீஆக்களிடம் மட்டுமே உள்ளது. இதனால்தான், நபிகளாரைப் பற்றியும் அவர்களது மனைவியரைப் பற்றியும் மோசமாக விமர்சித்து நூல் எழுதிய சல்மான் ருஷ்திக்கு, ஈரானின் இமாம் கொமெய்னி அவர்கள், மரண தண்டனை விதித்து பத்வா வழங்கியிருந்தார்கள். சல்மான் ருஷ்திக்கு எதிராக ஃபத்வா வழங்கியவர்கள் ஷீஆக்கள் மட்டுமே என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

எனினும், ஷீஆ முஸ்லிம்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள், அவை தொடர்பாக எவ்வித ஆராய்ச்சியுமின்றி எழுந்தமானமாகக் கூறிவிட்டுச் செல்ல முனைகின்றனர். அல்லது ஒரு பக்க சான்றுகளை மட்டும் வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்கின்றார்கள். அல்லது குற்றம் பிடிக்க வேண்டும் என்பதற்காகவே தேடுகின்றார்கள். எத்தனையோ நல்ல விடயங்கள் இருக்க அவை

பற்றியெல்லாம் பேசுவதையும் எழுதுவதையும் திட்டமிட்டுத் தவிர்க்கின்றார்கள்.

அதேவேளை, அஹ்லுஸ் சுன்னாக்கள் மத்தியில் இருப்பது போன்று, ஷீஆக்கள் மத்தியிலும் சில தீவிரப் போக்குடையோர் இருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. அவர்களது ஒரு சில செயற்பாடுகளை வைத்து, முழுச் சமூகத்தையும் எடை போட முனைவதுதான் தவறானது. அதாவது, லண்டனில் ஷீஆக்கள் என்ற பெயரில் ஒரு குழு இயங்கி வருகின்றது. இவர்கள், மேற்குலகினால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவர்கள். ஷீஆக்கள் என்ற போர்வையைப் போர்த்தியுள்ளவர்கள். மிகவும் சொற்பமானவர்கள். உண்மையில் இவர்கள் ஷீஆக்களே அல்ல. இவர்கள், உலகிலுள்ள ஷீஆ சமூகத்தின் மீது காழ்ப்புணர்வையும் எதிர்ப்புணர்வையும் உண்டாக்க வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டு வருபவர்கள். இவர்கள் தமது பிழையான செயற்பாடுகளை வீடியோ எடுத்து விநியோகிக்கின்றனர். அவற்றைக் காணும் சாதாரண முஸ்லிமுக்கு ஷீஆக்கள் மீது கோபமும் வெறுப்பும் வருவது தவிர்க்க முடியாதது. ஆனால், அறிஞர்களாக உள்ளவர்கள் இவற்றைத் தீர விசாரித்தே முடிவுக்கு வர வேண்டும்.

உதாரணமாக, இலங்கையில், தொழுகை கடமையில்லை என்று கூறிக் கொள்ளும் ஒரு சமூகம் உள்ளது. அவர்கள் தங்களை சுன்னாக்கள் என்றே அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். இவர்களை வைத்து, உலகிலுள்ள முழு சுன்னாக்களும் தொழுகை கடமையில்லை என்ற கொள்கையைக் கொண்டுள்ளனர் என்று கூறுவது எவ்வளவு அபத்தமானது. அதேபோன்றுதான், ஷீஆ என்ற பெயரில் இயங்கும் சில மேற்குலக ஆதிக்கத்திற்குட்பட்ட குழுக்களின் மோசமான செயற்பாடுகளை வைத்து, முழு ஷீஆ சமூகத்தையும் எடை போட முனைவது தவறானதாகும்.

லண்டனில் யாசிர் அல்ஹபீபி என்பவர், தன்னை ஷீஆ என்று கூறிக் கொண்டு, நபிகளாரின் மனைவியரையும் ஸஹாபாக்களையும் தூஷிக்கும் செயற்பாடுகளைச் செய்து வருகின்றார். உண்மையில் இவர் ஷீஆ அல்ல என்றும், இவர் பிரித்தானிய ஏஜண்ட் என்றும்

ஷீஆ அறிஞர்கள் அறிவித்துள்ளனர். எனவே, இது போன்ற தனியொருவரது அல்லது அவர் சார்ந்த சிறு குழுக்களது செயற்பாடுகளை வைத்துக் கொண்டு ஒட்டு மொத்த ஷீஆக்களையும் குறை கூறுவது புத்தியுள்ளவர்களின் செயலாகாது. ஒரு கருத்து ஷீஆ கருத்து ஆக வேண்டும் எனில், அதனை, முஜ்தஹித் நிலையிலுள்ள ஷீஆ அறிஞர் ஒருவர் கூற வேண்டும். அப்போதே அது ஷீஆக்களின் கருத்தாகக் கருதப்படும். அவ்வாறின்றி, தனியொருவர் கூறுகின்ற கருத்துகளெல்லாம் ஷீஆ கருத்துகளாக அமைய முடியாது என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். யாசிர் அல்ஹபீபி என்பவர் அறிஞருமல்ல, முஜ்தஹிதுமல்ல. எனவே, அவரது கருத்துகளையும் செயற்பாடுகளையும் மேற்கோளாகக் காட்டி ஷீஆ சமூகத்தின் மீது சேறு பூச முனைவது மோசமான அறியாமையாகும்.

அதேபோன்று, ஆஷூரா தினங்களின் போது தமது உடம்பில் காயங்களை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் நடந்து கொள்வது ஹராம் என்று ஷீஆ அறிஞர்கள் ஃபத்வா கொடுத்துள்ளனர். ஈரானில் இந்த ஃபத்வா அமுலில் உள்ளது. ஈரானிலுள்ள யாரும் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதில்லை. ஆனால், பாகிஸ்தான் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சில தீவிரப் போக்குடையோர் தடையையும் மீறி இவற்றைச் செய்து வருகின்றனர். இதற்காக முழு ஷீஆ சமூகத்தையும் பிழையாக நோக்குவது எவ்வளவு தவறானது?

ஷீஆக்கள் மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுகளின் போது, சில ஹதீஸ்களையும் அவை இடம்பெற்றுள்ள ஹதீஸ் கிரந்தங்களையும் இவர்கள் ஆதாரமாக முன்வைக்கின்றனர். தவறான ஹதீஸொன்று ஷீஆ சமூகத்தினர் பயன்படுத்துகின்ற கிரந்தங்களில் இடம்பெற்றுள்ளது என்பதற்காக, அந்தத் தவறை முழு ஷீஆ சமூகத்தின் மீதும் திணிப்பது எவ்வளவு அபத்தமானது. ஷீஆ சமூகத்தினர், எல்லா ஹதீஸ் கிரந்தங்களிலிருந்தும் பயன் பெறுகின்றனர். ஆனால், எந்த ஹதீஸ் கிரந்தத்தையும் ஸஹீஹ் என்று கூறுவதில்லை. அவர்கள் அதிகம் பயன்படுத்துகின்ற உசூலுல் காபி கிரந்தத்தைக் கூட அவர்கள் ஸஹீஹ் என்று கூறுவதில்லை. ஏனெனில் எல்லா ஹதீஸ் கிரந்தங்களிலும் எல்லா வகையான

ஹதீஸ்களும் உள்ளன. ஒவ்வொரு ஹதீஸையும் ஆராய்ந்தே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஷீஆக்களுக்கு எதிரான ஆதாரமாக இந்த வஹாபிகள் முன்வைக்கின்ற ஹதீஸ்கள், ஷீஆ சமூகத்தினரால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டவை என்பதை இவர்கள் அறியாதிருப்பதற்கு நாம் பொறுப்பாக முடியுமா? உசூலுல் காபியில் நூற்றுக்கணக்கான ழயீபான ஹதீஸ்கள் உள்ளதாக அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன. இது தெரியாமல், உசூலுல் காபியில் இடம்பெற்றுள்ள ஒரு ஹதீஸை வைத்துக் கொண்டு முழு ஷீஆ சமூகத்தையும் பிழை கூறுவது எவ்வளவு பெரிய அறியாமை!

இந்த சமூகத்தின் மத்தியில் அன்னை ஆயிஷா நாயகி அவர்களைப் பற்றி தவறாகப் பேசி வருபவர்கள் யார்? இந்த சமூகத்தில் கண்ணியத்திற்குரிய ஸஹாபாக்கள் பற்றித் தாறுமாறாக விமர்சித்து வருபவர்கள் யார்? தௌஹீத் ஜமாஅத் என்ற போர்வையிலுள்ள இந்த வஹ்ஹாபிஸக் கும்பலே இவற்றையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றது. ஆனால், நபிகளாரின் மனைவியர் பற்றியோ, அருமை ஸஹாபாக்கள் பற்றியோ அஹ்லுபைத் ஜமாஅத்தினராகிய நாங்கள் ஏதேனும் விமர்சனங்களையோ தவறான பிரசாரங்களையோ உங்களுக்குக் கூறியிருக்கின்றோமா? நபிகளாரின் மனைவியரைப் பற்றியோ ஸஹாபாக்களைப் பற்றியோ எமது ஜமாஅத்தைச் சேர்ந்த யாரேனும் தாறுமாறாகப் பேசியதையோ ஏசியதையோ யாராவது கண்டிருக்கிறீர்களா? கேட்டிருக்கிறீர்களா? எனவே, நாம் செய்யாத விடயங்களை, செய்ததாகக் கதையளக்கும் இவர்களை நீங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. நபிகளாரின் ஸஹாபாக்களை கடுமையாக விமர்சிக்கும் உரைகளை நிகழ்த்தியவர், இந்திய தௌஹீத் ஜமாஅத்தின் தலைவர் பி.ஜே. அந்த பி.ஜே, நபிகளாரின் ஸஹாபாக்களுக்கு ஏசிய அளவுக்கு உலகில் வேறு எவரும் ஏசியிருக்க முடியாது.

**நாங்கள் செய்யாதவை**

இலங்கையில் வாழும் அஹ்லுல்பைத் ஜமாஅத்தினராகிய நாங்கள், இந்த நாட்டின் சட்டதிட்டங்களை மதித்து, முஸ்லிம் ஐக்கியத்தையும் இன ஐக்கியத்தையும் வலியுறுத்தி வாழ்ந்து வருகின்றோம். நாங்கள்

ஒரு போதும் இந்த நாட்டிலும் இந்த சமூகத்திலும் குழப்பங்களை உண்டுபண்ணியது கிடையாது. எம்மைக் கடுமையாக விமர்சிக்கும் வஹ்ஹாபிஸ இயக்கத்தினரே இவை அனைத்தையும் செய்கின்றனர்.

நாங்கள் ஒரு போதும் காபிர் என்றோ வழிகேடன் என்றோ சக முஸ்லிமை இழிவுபடுத்துவது கிடையாது. மற்ற மத்ஹப்களையோ மற்ற இயக்கங்களையே வழிகெட்ட கூட்டம் என்று தூற்றுவது கிடையாது. மற்ற முஸ்லிம்களது மனம் புண்படும் படி ஒரு போதும் நடந்து கொண்டது கிடையாது. சில்லறைப் பிரச்சினைகளைத் தூக்கிக் கொண்டு, மக்கள் மத்தியில் குழப்பங்களையும் அவநம்பிக்கைகளையும் சண்டைகளையும் உண்டுபண்ணியது கிடையாது. ஆனால், எம்மைத் திட்டுகின்ற வஹ்ஹாபிஸ இயக்கத்தினரோ, தம்மைத் தவிர்ந்த அனைத்து இயக்கத்தினரும் வழிகேடர்கள் என்று பிரகடனப்படுத்தியுள்ளனர். மத்ஹப்களைப் பின்பற்றுபவர்கள் வழிகேடர்கள் என்பது அவர்களது பத்வா.

இலங்கையில் 80 சதவீதமான முஸ்லிம்கள் வழிகேட்டில் உள்ளனர் என்று இந்த வஹாபிகள் கூறுகின்றனர். இங்குள்ள முஸ்லிம்கள் ஷாபி மத்ஹபைப் பின்பற்றுவதுதான் இந்த வழிகேட்டிற்குக் காரணமாம்.

அரபுக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பல வருடங்கள் பயின்றவர்கள் கூட, மார்க்கம் தொடர்பில் ஏகோபித்த கருத்தைக் கொண்டவர்களாக இல்லை. பல்வேறு முரண்பாடுகளுடன் காணப்படுகின்றனர். ஒவ்வொருவரும் தத்தமது அறிவுக்கும் விளக்கத்திற்கும் ஏற்ப மார்க்கத்தை விளங்கிப் பின்பற்றி வருகின்றனர். இந்நிலையில், மார்க்கம் பற்றிய அடிப்படை அறிவு கூட இல்லாத பாமர மக்களிடம், இவ்வாறான மார்க்கம் தொடர்பான கருத்து முரண்பாடான விடயங்கள் பற்றிப் பேசுவதும் மக்களை பிரச்சினைக்குத் தூண்டி விடுவதும் எவ்வகையில் நியாயமாகும்?

நாங்கள் சவூதியிலிருந்தோ வேறு நாடுகளிலிருந்தோ நிதிகளைப் பெற்று தெருவுக்கு ஒரு பள்ளி என பள்ளிவாயல்களைக் கட்டி, சமூகத்தைப் பிரித்து வைத்தது கிடையாது. ஓவ்வோர் இயக்கமும் தத்தமது இயக்கத்திற்கென பள்ளிவாயல்களைக் கட்டிக் கொண்டு அதனூடாக தமது பிரசாரங்களை முன்னெடுத்து ஆட்களைத் திரட்டி

வரும் நிலையில், நாம் அத்தகைய சமூகப் பிளவை ஏற்படுத்தாமல், ஐக்கியத்திற்காக வழிவிட்டு அமைதியாக இருக்கின்றோம். ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்த நல்லுறவைப் பயன்படுத்தியோ, ஈரானின் பொருளாதார பலத்தைப் பயன்படுத்தியோ நாம் இத்தகைய எவ்வித பிழையான செயல்களையும் மேற்கொண்டது கிடையாது.

பெருநாட் தினங்களின் போது கூட, தௌஹீத் ஜமாஅத் எனும் போர்வையிலுள்ள வஹாபிஸ இயக்கங்கள், மக்களிடையே குழப்பங்களை உண்டு பண்ணி, ஏனைய சமுதாய மக்கள் நம்மை கேலிப் பொருளாகப் பார்க்கும் அளவு பிரச்சினைகளை உண்டாக்கியிருக்கின்றனர். அப்படியான நேரங்களிலும் நாம் ஜம்இய்யதுல் உலமா எனும் பொதுத் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்பட்டே எமது பெருநாள் தினங்களை அனுஷ்டித்து வந்தோம்.

அரபுக் கல்லூரிகளில் பிளவுகளையும் பிரச்சினைகளையும் உருவாக்கிய வரலாறு எமக்குக் கிடையாது. ஆனால், எம்மை எதிர்க்கின்ற சகோதரர்கள், எத்தனை அரபுக் கல்லூரிகளைப் பிரித்துள்ளார்கள்? அரபுக் கல்லூரிகளுக்குள் எவ்வளவு குழப்பங்களை உண்டுபண்ணியுள்ளார்கள் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

சந்தர்ப்பவாத ஃபத்வாக்களைக் கொடுக்கும் வழக்கமும் எம்மிடம் கிடையாது. சில்லறைப் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தி, அவற்றினூடாக மக்கள் மத்தியில் சண்டைகளை உண்டாக்கியவர்கள் யார் என்பதை இந்த சமூகம் நன்கறியும். வெறுமனே நெஞ்சில் தக்பீர் கட்டுதல், அத்தஹிய்யாத்தில் விரலசைத்தல், குனூத் ஓதக் கூடாது, ஸலவாத் சொல்லக்கூடாது, தல்கீன் ஓதக்கூடாது போன்ற சில்லறைத்தனமான பிரச்சினைகளுக்காக எத்தனை இளைஞர்களை

இவர்கள் பொலிசுக்கும் கோர்ட்டுக்கும் இழுத்துச் சென்றுள்ளார்கள்! சில்லறைப் பிரச்சினைகளைப் பேசி, மார்க்கத்தில் வாஜிபாக உள்ள சமூக ஐக்கியத்தைக் குழப்பியவர்கள் இவர்களே. மத்ஹப்களைப் பின்பற்றுவதும் இமாம்களைப் பின்பற்றுவதும் ஹராம் எனவும்

வழிகேடு எனவும் கூறும் இவர்கள், தமக்குச் சாதகமாக அமையும் மட்டும் போது இமாம்களது கூற்றுகளை மேற்கோளாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இது இவர்களது நயவஞ்சகத்தனத்தையல்லவா காட்டுகின்றது!

எமது சமூகத்தை, பிற இனத்தவர்கள் தூற்ற முனைகின்றார்கள் என்றால், அதற்கு யார் காரணம்? வஹாபிஸ இயக்கத்தினர், மூலைக்கொரு பள்ளியைக் கட்டி, மற்ற மதத்தவர்களது புனிதஸ்தலங்களை அவமதிக்க முனைந்ததன் காரணமாகவே, பொதுபல சேனா போன்ற இனவாதக் கும்பல்கள் எம்மைத் தாக்க முனைந்தன.

மிக நீண்டகாலமாக ஜம்இய்யதுல் உலமா எம்மைப் புறக்கணித்து எமது உரிமைகளை மொத்தமாக மறுத்து வருகின்றது. எனினும், வஹாபிஸ இயக்கங்கள் செய்தது போன்று, நாம் தனியாக உலமா சபையொன்றை ஸ்தாபிக்கவோ சமூகத்தில் குழப்பங்களை உண்டுபண்ணவோ முயலவில்லை. எம்மிடம் அவ்வாறானதொரு உலமா சபையை அமைப்பதற்குப் போதிய எண்ணிக்கையில் உலமாக்கள் இருந்த போதும், நாம் சகிப்புடனேயே இருந்து வருகின்றோம்.

இன்று இலங்கையிலுள்ள வஹாபிஸ இயக்கத்தினர், ஜம்இய்யதுல் உலமாவை தமது பண பலத்தினால் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றனர். எமக்கு எதிராக, ஜம்இய்யதுல் உலமாவினால் நடத்தப்படுகின்ற அனைத்து கூட்டங்களுக்கும் நிதி அனுசரணையை வழங்குபவர்கள் இவர்களே. இவர்களது கை ஓங்கியமையினால் ஏனைய குழுக்கள் பலவீனமடைந்துள்ளன. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, வஹாபிஸ தௌஹீத் இயக்கத்தினர் பெரும் குழப்பங்களை உண்டுபண்ண முயன்று வருகின்றனர். எனவே, ஜம்இய்யதுல் உலமா என்ற போர்வைக்குள் ஒளிந்திருக்கும் இந்த வஹாபிஸ சக்திகளை இனங்கண்டு அவர்களின் முகத்திரைகளைக் கிழிக்க வேண்டிய பொறுப்பு எம் எல்லோருக்கும் உள்ளது. இந்தத் தீவிர வஹாபிகளின் கைகள் ஓங்கியுள்ளமையினால், ஜம்இய்யதுல் உலமா, எமது நம்பிக்கையை இழந்து விட்டது.

உலகில் சர்வதேச வஹாபிகளான ஐஎஸ்ஐஎஸ் போன்ற தீவிரவாதக் குழுக்கள், இன்று முஸ்லிம்களின் கைகளை வெட்டுகின்றனர், கழுத்தை அறுக்கின்றனர், நெருப்பில் எரிக்கின்றனர். நெஞ்சைப் பிளந்து ஈரலைக் கடித்துத் துப்புகின்றனர், தலைகளை வெட்டி ஈட்டியில் குத்தி ஊர்வலம் கொண்டு செல்கின்றனர், இவ்வளவு அநியாயங்களையும் வீடியோ எடுத்து இணையத்தில் காண்பிக்கின்றனர். அதன் மூலம் இஸ்லாம் ஒரு கொடூரமான மார்க்கம் என உலகில் நிறுவ முனைகின்றனர்.

ஆனால், இவற்றைப் பார்த்து இங்குள்ள வஹாபிகளோ புல்லரித்துப் போயுள்ளனர். தமக்கு இப்படியான ஆயுதங்கள் கிடைக்குமானால், இங்குள்ள முஸ்லிம்களுக்கும் இதே போன்ற அநியாயங்களை இவர்கள் செய்வார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. எனவே, முஸ்லிம்களை அழிக்க முனைவது இந்த வஹாபிஸ இயக்கத்தினரே என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

ஈரானைப் பற்றி இவர்கள் மிகவும் தரக்குறைவாகக் கதைத்து வருகின்றனர். ஆனால், ஈரான் எமது இலங்கைத் திருநாட்டில் எவ்விதக் குழப்பங்களையும் உண்டுபண்ண ஒரு போதும் முயன்றதில்லை. இங்குள்ள பல மத்ரஸாக்களுக்கு ஈரான் நிதி உதவி வழங்குகின்ற போதிலும், ஈரானிலுள்ள கொள்கையை அமுல்படுத்துமாறு ஒரு போதும் அது வற்புறுத்தியதில்லை.

ஈரானின் அறிமுகத்தினால் இலங்கை பல நன்மைகளை அடைந்துள்ளதையும் நாம் மறந்து விடக் கூடாது. ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் பின்னர்தான், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பெண்களுக்கான பர்தா அறிமுகமானது. அதற்கு முதல், பெண்கள் தமது தலைகளை முறையாக மறைத்துக் கொள்ளும் வழக்கம் இலங்கையில் இருக்கவில்லை. ஈரானினால் 1985ல் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பெண்களுக்கான பர்தா முறையை இன்று நாம் எல்லோரும் பின்பற்றுகின்றோம். இன்று அது இலங்கை முஸ்லிம் பெண்களுக்கான ஒரு தேசிய உடையாக மாறியுள்ளது. இதைத் தவிர, இலங்கைக்கு பெருந்தொகையான உதவிகளை ஈரான் வழங்கியுள்ளது. அவற்றின் மூலமாக இலங்கையின் ஒவ்வொரு

பிரஜையும் பயன் பெற்று வருவதையும் நாம் மறந்து விட முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரை, ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் தான் விரும்பும் மார்க்கத்தையும் மத்ஹபையும் பின்பற்றுவதற்கு அரசியல் யாப்பினூடாக உரிமைகளைப் பெற்றுள்ளான். அத்தகைய சட்டதிட்டங்களைப் பயன்படுத்தி எமக்கான மார்க்க, வழிபாட்டு உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பிருந்தும் கூட, எமக்கெதிராக செய்யப்பட்டு வருகின்ற பகிரங்கமானதும் அசிங்கமானதுமான பிரசாரங்களை நாம் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருக்கின்றோம். எவ்வகையிலும், இந்த சமூகத்தில் எம்மால் குழப்பங்கள் ஏற்பட்டு விடக் கூடாது, எம்மால் இந்த சமூகத்தின் ஐக்கியம் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதே எமது ஒரே இலக்காக இருக்கின்றது.

எனினும், எமது பொறுமை நாம் பலவீனமானவர்கள் என்பதாக பிறருக்கு அடையாளப்படுத்துமானால், அதிலிருந்து விலகி எமது பாதையையும் அணுகுமுறையையும் மாற்றிக் கொள்ள வேண்டிய கடமையும் எமக்குள்ளது என்பதை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகின்றோம்.

எம்மைப் பற்றி தாறுமாறாகத் தூஷித்து வருகின்ற சகோதரர்கள், இது தொடர்பில் ஒரு போதும் எம்மை அணுகி, எம்முடன் சுமுகமான கலந்துரையாடல் ஒன்றுக்கு வருவதற்கு முயற்சித்தது கிடையாது. நாங்கள் தவறான வழியில் இருக்கின்றோம் என அவர்கள் கருதியிருந்தால், எம்மைத் திருத்துவதற்கு அவர்கள் முயற்சி செய்திருக்க வேண்டுமல்லவா! அதை ஏன் அவர்கள் செய்யவில்லை. அதை விட்டு விட்டு பொறுப்பற்ற முறையில் பொதுமக்களைக் கூப்பிட்டு எமக்கெதிராக அவ் அப்பாவி மக்களைத் தூண்டிவிட்டு வன்முறைகளையும் கலவரங்களையும் உள்வீட்டுக்குள் உருவாக்க நினைப்பது அழகான செயலா?

ஆனால், ஜம்இய்யதுல் உலமா என்ற அடையாளத்தைக் கையகப்படுத்தியுள்ள இந்த வஹாபிஸ இயக்கத்தினர், எமக்கெதிரான வன்முறைகளைத் தூண்டி விடுவதிலேயே குறியாக இருப்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

இதன் மூலம், அவர்களது நோக்கமெல்லாம், இந்த சமூகத்தின் மத்தியில் குழப்பங்களையும் பிரிவினைகளையும் உண்டுபண்ணுவதும், எம்மை வலிந்து சண்டைக்கு இழுப்பதுமேயன்றி, வேறொன்றுமில்லை என்பது எமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

தற்போதைய நிலையில், உலகின் பல பாகங்களிலும் வஹ்ஹாபிஸ இயக்கத்தினர் தடைசெய்யப்படும் நிலையில் உள்ளனர். எமது இலங்கையிலும் தௌஹீத் ஜமாஅத் என்ற போர்வைக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் இந்த வஹ்ஹாபிகள் தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கமாக மாறும் நிலை வெகுதூரத்தில் இல்லை. காரணம், அவர்களது கடும்போக்கு, சமூகத்துக்குள் பிளவுகளையும் வன்முறைகளையும் தூண்டுதல் மற்றும் பிற சமூகங்களை மதித்து நடக்காமை என்பனவாகும். இவ்வாறான நிலையில் அவர்கள் மற்றொரு சமூகத்தைக் குறைகூறிக் கொண்டிருப்பது வேடிக்கையாக உள்ளது. அவர்களுடன் நாமும் முரண்பட்டுச் செயற்படுவதனால், அவர்களைக் காட்டிக் கொடுத்த நிலைக்கு ஆளாகி விடுவோம் என்பதற்காகவுமே நாம் பொறுமையாக இருந்து வருகின்றோம்.

எனினும், இவர்கள் தமது அடாவடித்தனமான செயற்பாடுகளை நிறுத்திக் கொள்வதாக இல்லை. முதலில், துண்டுப் பிரசுரங்கள் மூலமாக எம்மைத் தூற்றினார்கள். பின், பள்ளிவாயல் உரைகளில் எம்மைத் திட்டினார்கள். தொடர்ந்து, ஜூம்ஆ பயான்களில் ஏசித் தீர்த்தார்கள். எம்மைக் கடுமையாக விமர்சித்து நூல்களை எழுதி ஆடம்பரமாக வெளியிட்டார்கள். எம்மைத் திட்டுவதற்கென்றே பெருந்தொகைப் பணத்தை செலவழித்து கருத்தரங்குகளை நடத்தினார்கள். எமது கனிவான ஸலாத்திற்கு பதிலுரைக்க மறுத்தார்கள். எம்மோடு தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டாம் என்று பொதுமக்களை அச்சுறுத்தினார்கள். எமக்கு தொடர்ச்சியான சிரமங்களையும் நெருக்கடிகளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், இவர்கள் இவ்வாறெல்லாம் செய்யுமளவிற்கு நாம் செய்த பாவம்தான் என்ன? இந்த சமூகத்திற்கு நாம் ஏதாவது நெருக்கடிகள்

கொடுத்துள்ளோமா? ஏதாவது குழப்பங்கள் விளைவித்து உள்ளோமா? இளைஞர்களை வன்முறைகளுக்குத் தூண்டி விட்டுள்ளோமா? சமூகத்தைப் பிளவுபடுத்தியுள்ளோமா? இவை எல்லாவற்றையும் செய்தவர்கள் இந்த வஹாபிஸ இயக்கத்தினர்.

இவர்களது தாறுமாறான விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் முகமாகவே "கண்டறிந்த உண்மைகள்" எனும் சிறு தொகுப்பொன்றை நாம் உங்களுக்கு வழங்கியிருக்கின்றோம். அதனை நன்கு வாசிக்குமாறு நாம் வேண்டிக் கொள்கின்றோம். அதன் மூலம், ஷீஆக்கள் தொடர்பாக எம் மத்தியிலுள்ள தவறான புரிதல்களை அகற்றி, அற்பமான முரண்பாடுகளை மறந்து நாம் அனைவரும் ஐக்கியப்பட்டு வாழ்வதற்கான சாத்தியங்களை உண்டாக்கிக் கொள்ள முடியும்.

ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்கள், கலிமா, தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ், நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல் உள்ளிட்ட மிகப் பெருமளவான விடயங்களில் ஷீஆக்களுக்கும் சுன்னாக்களுக்கும் இடையே எவ்வித வேறுபாடுகளும் இல்லை. அதனால், இரு தரப்பாரும் இணைந்து செயற்படுவதற்கு நிறைய வாய்ப்புகளும் வழிகளும் உள்ளன. எனவே, சிறிய சிறிய முரண்பாடுகள் எம்மைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்தி விடக் கூடாது என்பதில் நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

சமூகத்தின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதே எமது நோக்கம். சில்லறைப் பிரச்சினைகளையும் பொய்களையும் கூறி அந்த ஐக்கியத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தி வரும் சூத்திரதாரிகளை இனங்கண்டு அவர்களின் முகத்திரைகளைக் கிழித்து, ஒரே சமூகமாக ஒன்றுபட்டு வாழ்வதற்கு நாம் அனைவரும் அணி திரண்டு எழுவோம்.

அல்லாஹு அக்பர்!

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல்அஸ்ஹர் பல்கலைக்கழக வேந்தர் ஷைகுல் அஸ்ஹர் கலாநிதி அஹ்மத் அல்தைய்யிப் அவர்கள், எகிப்திய அல்நீல் தொலைக்காட்சிக்கு வழுங்கிய நேர்காணல்:

ஷீஆக்களைப் பற்றி அல்அஸ்ஹர் என்ன சொல்கிறது? எகிப்தின் அல்நீல் செனலுக்கு அல்அஸ்ஹர் பல்கலைக்கழ வேந்தர் கலாநிதி அஹ்மத் அல்தைய்யிப் அவர்கள் வழங்கிய நேர்காணலும், ஷீஆக்களைப் பற்றிய அல்அஸ்ஹர் பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி அஹ்மத் அல்தைய்யிப் அவர்களின் கருத்துகளும்.

தமிழ் பேசும் நல்லுலகின் நன்மை கருதி, அவரின் நேர்காணலை தமிழில் தருகின்றோம்.

*கேள்வி: ஷீஆக்களின் நம்பிக்கை தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் உங்கள் பார்வையில் தென்படுகின்றதா?*

*பதில்: கிடையாது. இல்லவே இல்லை. ஐம்பது வருடங்களுக்கு முன், அல்அஸ்ஹர் பல்கலைக்கழக வேந்தர் ஷைகுல் அஸ்ஹர் ஷைக் மஹ்மூத் ஷல்தூத் அவர்கள் வழங்கிய மார்க்கத் தீர்ப்பின் பிரகாரம், ஷீஆ மத்ஹப் (சிந்தனைப் பிரிவு) ஆனது, ஏனைய மத்ஹப்களோடு, ஐந்தாவது மத்ஹபாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.*

*கேள்வி: எமது பிள்ளைகள் ஷீஆ இஸ்லாமிய சிந்தனைப் பிரிவை தழுவிக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் இதற்காக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்?*

பதில்: அவர்கள் ஷீஆ மத்ஹபைத் தழுவிக் கொள்ளட்டுமே. யாராகிலும் ஒருவர் மாலிகி மத்ஹபை, அல்லது ஹனபி மத்ஹபை விட்டு விலகினால், அவரை நாம் விமர்சிப்பதில்லையே. இந்தப் பிள்ளைகள் நான்கு மத்ஹப்களையும் விட்டு விட்டு ஐந்தாவது மத்ஹபில் இணைந்து கொள்கின்றார்கள்.

கேள்வி: ஷீஆக்கள் எமது உறவினர்களாக மாறிக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் பிள்ளைகளை திருமண பந்தத்தின் மூலம் தம்முடன் இணைத்துக் கொள்கின்றார்களே?

பதில்: இதில் என்ன தவறு? மதங்களுக்கிடையிலான திருமணமே அனுமதிக்கப்பட்டுள்ளதே.

கேள்வி: ஷீஆக்களிடம் வித்தியாசமான வேறு ஒரு குர்ஆன் உள்ளது எனக் கூறப்படுகின்றதே. இது பற்றி?

பதில்: இது, வயது முதிர்ந்த பெண்களின் ஆதாரமற்ற மூட நம்பிக்கையும் கட்டுக்கதையும். ஷீஆக்களிடம் இருக்கின்ற குர்ஆனுக்கும் எங்களிடம் உள்ள குர்ஆனுக்கும் இடையில் எவ்வித வித்தியாசமுமில்லை. அவர்களின் குர்ஆனில் காணப்படுகின்ற அகர எழுத்துகளுக்கும் எங்கள் குர்ஆனின் அகர எழுத்து வரிசைகளுக்கும் இடையிலேயும் கூட வித்தியாசம் எதுவும் காணப்படவில்லை.

கேள்வி: ஒரு நாட்டின் (சவூதி அரேபியா) 23 மத போதகர்கள், “ஷீஆக்கள் காபிர்கள்” என ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) வழங்கியுள்ளார்களே?

பதில்: முஸ்லிம்களுக்காக ஃபத்வா வழங்கும் அதிகாரபூர்வமான அமைப்பு அல்அஸ்ஹர் மாத்திரமே. மேலே கூறப்பட்ட பத்வா செல்லுபடியற்றது. நம்பகத்தன்மையற்றது.

கேள்வி: ஷீஆக்களுக்கும் சுன்னாக்களுக்கும் இடையில் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரிவினை, வித்தியாசம் என்ன கூறி நிற்கின்றது ஷைக் அவர்களே?

பதில்: வெளிநாட்டுச் சக்திகளின் கொள்கை வகுப்பாளர்களின் சதியே இது என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது. அவர்களின் நலன் காக்க ஷீஆ-சுன்னா பிளவினை தங்கள் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கேள்வி: எங்களிடம் மிகவும் முக்கியமான கேள்வி ஒன்றுள்ளது. ஷீஆக்கள் கலீபாக்களான அபூபக்கர் (ரழி) மற்றும் உமர் (ரழி) ஆகியோரை ஏற்றுக் கொள்வதில்லையே. அப்படிப்பட்ட ஷீஆக்களை முஸ்லிம்கள் என்று தங்களால் எவ்வாறு கூற முடியும்?

பதில்: ஆம். ஆம். அந்த கலீபாக்களை ஷீஆக்கள் ஏற்றுக் கொள்திில்லைதான். ஆனால், அவர்களை காபிர் என்று அவர்கள் கூறுவதில்லை. மேலும், அபூபக்கர்

அவர்களையும், உமர் அவர்களையும் ஏற்றுக் கொள்வது இஸ்லாமிய அடிப்படையான உசூலுத்தீனின் ஒரு பகுதியா? அபூபக்கர், உமர் பற்றிய சம்பவம் வரலாற்று ரீதியான ஒரு சம்பவம். (உசூலுத்தீன் எனும்) அடிப்படை நம்பிக்கைகளுக்கும் வரலாற்றுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

கேள்வி: (பதிலைக் கேள்வியுற்ற நிருபர், சற்று ஆச்சரியமடைந்தவராகக் கேட்கிறார்) ஷீஆக்களின் அடிப்படைப் பிரச்சினை – அவர்களின் இமாம் – தற்காலத்திற்குரிய இமாம் (இமாமுல் அஸ்ர்) ஆயிரம் வருடங்கள் கழிந்தும் இன்னும் உயிர் வாழ்கின்றார் எனக் கூறுகின்றனரே?

பதில்: அவர் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஏன் இது சாத்தியமில்லை? ஆனாலும் நாங்கள் சுன்னாக்கள் என்பதனால் அவர்களைப் போன்று இது தொடர்பாக நம்பிக்கை கொள்ள வேண்டுமென்று எந்தக் காரணமும் கிடையாது.

கேள்வி: (இமாம் முஹம்மது தகி அல்ஜவாத் (அலை) (ஷீஆக்களின் ஒன்பதாவது இமாம்) அவர்களைக் குறித்துக் கேட்கப்பட்டது.) அவர்களின் இமாம்களில் ஒருவர், எட்டு வயதுடைய சிறுவராயிற்றே. அவரை, ஷீஆக்கள் தங்களின் இமாமாக நம்பிக்கை கொண்டுள்ளனரே? எட்டு வயதுக் குழந்தை இமாமாக இருப்பதென்பது சாத்தியமா?

பதில்: தொட்டிலில் உள்ள குழந்தை நபியாக (நபி ஈஸா (அலை) அவர்கள்) வர இயலுமாயின், ஏன் எட்டு வயதுச் சிறுவர் இமாமாக வர முடியாது? இது ஆச்சரியமான ஒன்றல்ல. சுன்னாக்களாகிய நாங்கள் இக்கொள்கையை ஏற்றுக் கொள்ளா விடினும், இக்கொள்கை அவர்களின் இஸ்லாத்திற்கு எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஷீஆக்கள் முஸ்லிம்களே!.